www.tamilarangam.net

தடைகளைத் தகர்த்தெறிய
உறுதியுடன் போராடினுய் !



தோழர்
சந்ததியார் (வசந்தன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடரும் படுகொலைகளின் வரிசையில் தோழர் சந்ததியார்

*தோழர் சந்ததியார் (வசந்தன்) 18.9.85 அன்று சென்னையில் வைத்து அராஜகவாதிகளினால் மிகவும் இரகசியமான முறையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் இன்று வரை அவர் பற்றிய எதுவித தகவல்களும் வெளிவரவில்லை. இந் நடவடிக்கைக்கு யாரும் உரிமை கோரவும் இல்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. சுந்தரம், இறைகுமாரன், உமைகுமாரன், 'ஒபரேய்' தேவன், ஜெகன், மனோ மாஸ்டர், நேரு, சிவனேஸ்வரன், அகிலன், தயாநிதி [ரூபன்] உட்பட இன்னும் அறியப்பட்டோரும் நூற்றுக்கணக்கில் அறியப்படாதோர் பலருமாக படுகொலை செய்யப்பட்டோரின் பட்டியலில் தோழர் சந்ததியாரும் சேர்க்கப்பட்டுள்ளாரா?*

*இச் சம்பவம் நடந்து வெளியில் தெரிந்தபின்னரும் கூட ஆர்ப்பாட்டமெதுவுமின்றி அமைதியாகவும் மௌனமாகவும் தமிழ் மக்களும், சக விடுதலை இயக்கங்களும் இருந்து வருகின்றன. தமிழ் மக்களின் விடுதலைக்காக 15 வருடங்களாகப் போராடிய தோழர் சந்ததியாரின் இழப்பு குறித்து தமிழ் மக்கள் மிகவும் மௌனமாக இருப்பது மிகவும் வெட்கித் தலைகுனியக் கூடியதாகும். தமிழ் மக்களை அழிவிலிருந்து காப்பாற்றப் புறப்பட்ட விடுதலை இயக்கங்கள் கூட இது பற்றி மௌனமாக இருப்பது, அவர்களின் இயலாமையைக் குறிக்கின்றதா? அல்லது அவர்களின் சம்மதத்தைத் தெரிவிக்கின்றதா? சேர்ந்து வாழ்ந்த தோழர்கள் கூட இதற்கு குரல் கொடுக்கத் திராணியற்று தமது குரல்வளையைத் தாமே நெரித்துக் கொண்டுள்ளனரா?*

தோழர் சந்ததியார் 1951இல் சுழிபுரத்தில் பிறந்தார். இவர் மாணவராய் இருந்தபோதே **1970இல் தரப்படுத்தலுக்கு எதிராக தமிழ் மாணவர்கள் கிளர்ச்சி கொண்டபோது அதில் பங்கேற்று தமிழ் மாணவர் பேரவை உறுப்பினரானார்.** இவரது ஆற்றலையும், போர்க் குணம்சத்தையும் பார்த்த கூட்டணி தலைமை தமிழ் இளைஞர் பேரவையில் இவரைச் சேர்த்துக் கொண்டனர். 1975இல் துரையப்பா கொலையைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் சிறையில் இருந்த பின்னர் விடுதலையானார். சிறை மீண்ட பின்னர் த. இ. பேரவை தலைமைப் பதவியையும் கொடுத்து கூட்டணியினர் தமது நலன்களுக்குப் பயன்படுத்த முனைந்தனர். ஆனால் கூட்டணியினர் நினைத்ததுக்கு மாறாக கூட்டணியின் பிற்போக்குத் தனத்தையும், சந்தர்ப்பவாதத்தையும் இனங்கண்டு கொண்டார். அத்துடன் நில்லாமல் பிற்போக்குத் தனத்திற்கு எதிராக பகிரங்கமாகவும் குரல் கொடுத்தார். கூட்டணியினர் தமக்கெதிராகச் செயல்படும் பல்வேறு சக்திகளை தந்திரங்களைப் பாவித்து மீண்டும் தமது வலைக்குள் **வீழ்த்தியது போல் சந்ததியாரையும் தமது வலையில் வீழ்த்த முயற்சித்தனர். தோழர் சந்ததியார் அதற்கு இரையாகாமல் கூட்டணியினரை கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் மூலம் அம்பலப்படுத்தினர். சிறந்த பேச்சாளராகவும் விளங்கினர்.**

த. இ. பேரவையில் இருந்து வெளியேறி 1977 இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்த மலையக மக்களை காந்தீயத்தின் மூலம் குடியேற்றும் பணியில் ஈடுபட்டார். இவர், இக்காலகட்டத்திலேயே **வெறும் உதிரியான இராணுவ நடவடிக்கை மூலம் மட்டும் தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்க முடியாது எனும் கருத்தைக் கொண்டிருந்ததுடன் மக்கள் இயக்கம் ஒன்றைக் கட்டும் அவசியத்தையும் வலியுறுத்தி வந்தார்.**

சரியான மக்கள் இயக்கம் ஒன்றைக் கட்டும் பணியில் ஈடுபட்ட இவர் **தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை (PLOT) உருவாக்குவதில் முன்னோடியாக நின்று செயற்பட்டார்.** ஆனால் இவரிடம் சமூக சேவை நிறுவனம் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள், விடுதலைப் போராட்டத்தில் ஆற்றும் பாத்திரம் பற்றிய சில தவறான கண்ணோட்டங்கள் இருந்தன. இதன் காரணமாக காந்தீய, (PLOT) த. ம. வி. கழக வேலைகளில் பல தவறுகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டன. எப்படி இருந்தபோதும் இவர் ஆற்றிய பணி அளப்பரியது. த. ம. வி. கழகத்தை என்ன நோக்கத்திற்காக இவர் கட்டினரோ அது அந் நோக்கத்திலிருந்து திசைவிலகிப் போனதால் கருத்து வேறுபாடு காரணமாகவும், இயக்கத்துக்குள் உட்கட்சி ஜனநாயகமின்மையாலும் ஒரு வருடத்திற்கு முன் இயக்கத்தில் இருந்து வெளியேறினர். இவர் வெளியேறும் ஏனையோரைப் போல் வெளிநாடுகளுக்கு ஓடவில்லை. சொந்த நலனை முதன்மைப் படுத்தவில்லை; உயிருக்குப் பயந்து பின்வாங்கவில்லை; பல இன்னல்களுக்கு மத்தியிலும் **தொடர்ந்தும் சரியான மக்கள் இயக்கத்தைக் கட்ட அயராது உழைத்தார்.**

இவர், ஸ்தாபனம் பற்றி சில தவறான அணுகுமுறைகளை ஏற்கனவே கொண்டிருந்த போதும் அண்மைக்காலங்களில் தன்னை மீளாய்வு செய்து தனது தவறுகளைத் திருத்த அதிக ஆர்வம் காட்டினர். **தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுக்க பாட்டாளி வர்க்கத் தலைமையில் ஐக்கிய முன்னணி கட்டப்படுவதன் அவசியத்தையும், தேசிய விடுதலைப் போராட்டத்தை புதிய ஜனநாயகப் புரட்சியாக முன்னெடுப்பதன் அவசியத்தையும், சோவியத், அமெரிக்க வல்லரசுகளினதோ அல்லது வேறு நாடுகளினது பிடியிலோ சிக்காமல் சொந்தப் பலத்தில் தங்கிநின்று போராடுவதன் தேவையையும் வலியுறுத்தி வந்தார்.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சரியான திசை வழியில் முன்னெடுக்க இன்றைய இயக்கங்களில் உள்ள அராஜகத்தை முறியடிப்பதன் அவசியத்தை வலியுறுத்திப் போராடி வந்தார். குறிப்பாக இயக்கங்களுக்குள் நடக்கும் படுகொலைகளுக்கும், பாசிசத் தன்மைக்கும் எதிராகவும் போராடி வந்தார். இன்று அதே அராஜகத்திற்குப் பலியானர் தோழர் சந்ததியார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தோழர் சந்ததியார்!**

உனது இழப்பு மிகவும் கொடியது.

உனது வெற்றிடத்தை நாம் நிரப்புவோமென நம்புவாயாக!

**தமிழ் மக்களே!**

இதுவரை காலமும் நாம் நடந்துவந்த பாதை குரூரமானது; மிருகத்தனமானது; கொலை வெறி கொண்டது; ஜனநாயகமற்றது. பல நூற்றுக்கணக்கான தோழர்களின் தியாகங்களைச் சுயநலமாக்கிக் கொண்ட தலைமைகளைக் கொண்டது. படுகொலைகளின் மூலம் வரலாறு படைத்தது.

**தமிழ் மக்களே!**

**விழித்தெழுங்கள்!**

போலிகளை இனங்கண்டு கொள்ளுங்கள்!

ஜனநாயகத்திற்காகப் போராடுவீர்!

- □ அராஜகத்தை முறியடிப்போம்!
- □ பிற்போக்காளர்களை அம்பலப்படுத்துவோம்!
- □ சொந்தப் பலத்தில் நின்று போராடுவோம்!
- □ தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை வென்றெடுப்போம்!

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

**NATIONAL LIBERATION FRONT OF THAMILEELAM**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்